செ.வெ.எண். 730 நாள். 19.10.09

**செய்தி வெளியீடு–19.10.2009**

## இதுவரை இல்லாத அளவில் இலாபம் ஈட்டியுள்ள டான்சி – சிட்கோ – பூம்புகார் நிறுவனங்கள்

## தமிழக அரசுக்கு 19 கோடியே 54 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் இலாபப் பங்குத் தொகை!

## முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் ஊரக மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் வழங்கினார்!

"டான்சி" எனப்படும் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின்கீழ் தற்போது இயங்கிவரும் 36 தொழிற்கூடங்களும் இலாபத்தில் இயங்கி வருவதன் காரணமாக இந்நிறுவனம் இதுவரை இல்லாத அளவில் 2008–2009 ஆம் ஆண்டில் 128 கோடியே 31 இலட்சம் ரூபாய் அளவுக்கு உற்பத்தி செய்து 80 கோடியே 72 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது. இந்த இலாபத் தொகையிலிருந்து தமிழக அரசுக்கு நியமனக் கட்டணமாக 18 கோடியே 51 இலட்சம் ரூபாய்க்குரிய காசோலையையும்;

1970 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) இதுவரை இல்லாத அளவில் 2007–2008 ஆம் ஆண்டில் 8 கோடியே 48 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் இலாபம் ஈட்டி, இந்த இலாபத் தொகையிலிருந்து தமிழக அரசுக்கு 10 விழுக்காடு ஆதாயப் பங்குத் தொகையாக 87 இலட்சம் ரூபாய்க்கான காசோலையையும்;

"பூம்புகார்" எனப் பெயரிடப்பட்டு 1973 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் இதுவரை இல்லாத அளவில் 2008–2009 ஆம் ஆண்டில் 25 கோடியே 22 இலட்சம் ரூபாய் அளவுக்கு விற்பனைகள் செய்து முந்தைய ஆண்டுகளில் அடைந்த ஒட்டுமொத்த தொடர் நட்டமான 3 கோடியே 24 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாயை ஈடு செய்ததுடன் 2 கோடியே 21 இலட்சம் ரூபாய் நிகர இலாபம் ஈட்டிச் சாதனை படைத்து, அதன்

காரணமாக தமிழக அரசுக்குரிய இலாபப் பங்குத் தொகையாக 16 இலட்சத்து 42 ஆயிரத்து 200 ரூபாய்க்கான காசோலையையுமாக மொத்தம் 19 கோடியே 54 இலட்சத்து 42 ஆயிரத்து 200 ரூபாய்க்கான மூன்று காசோலைகளை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் ஊரக மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் பொங்கலூர் திரு. நா. பழனிசாமி இன்று (19.10.2009) வழங்கினார்.

இந்நிகழ்வின்போது அரசு தலைமைச் செயலாளர் திரு. கே. எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் – குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலாளர் திரு. ப. செல்வம், இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., கைத்தறி மற்றும் ஜவுளித்துறை முதன்மைச் செயலாளர் திரு.ஆர். இராஜகோபால், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர் – சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப. அரசு முதன்மைச் செயலாளர் – டான்சி நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. க. அலாவுதீன், இ.ஆ.ப., ‘பூம்புகார்’ நிர்வாக இயக்குநர் திரு.கே. செல்லமுத்து, இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.